**<u>வந்தவாசி நகராட்சி</u>**

**<u>அவசரக்கூட்டம் எண்.7, 2024 – 2025</u>**

**<u>24-03-2025 தேதியன்று திங்கள் கிழமை காலை 11. 30 மணிக்கு நகரமன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் மற்றும் நகரமன்ற துணைத்தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது. எனவே மேற்படி கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.</u>**

**189.** வந்தவாசி நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்கு மருந்து இருப்பு இல்லாத காரணத்தால் தமிழ்நாடு மெடிக்கல் சர்விஸ் கார்பரேஷன் லிமிடெட், நெ.417, பேன்தியான் சாலை எழும்பூர் சென்னை -8 அவர்களின் Roc.No. e-010/ M(P) INSE c7 – LARVI / TNMSC/2023. Date:01-07-2024ன்படி அங்கீகாரம் பெற்ற ADITHYA AGEDNCIES NO.33 பெருமலஸ்கரம் மெயின் ரோடு, திருவேற்காடு, சென்னை -77 நிறுவனம் மூலம் கீழ்கண்ட கொசு ஒழிப்பு மருந்து பெறலாம்.

1. RC002 Pyrethrum 2% Extract --- 100 Lit.
2. RC007 Temephos Emulsibiable--- 60 Lit.
3. RC080 Bacillus Thurungiensis --- 50 kg
   Var I sraelensis 5% wp
   Strain ABII / UNIT
4. ஸ்பிரேயர் -- 2 எண்ணிக்கை 5. கேஸ் சிலிண்டர் -- 100 எண்ணிக்கை

மேற்படி மருந்து உண்டான தோராய செலவினம் ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு-</u>

1, அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 868 /2025/எச்1) **(தீர்மானம் எண். 189 - மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.)**

**190.** வந்தவாசி நகராட்சியில் அலுவலக பணியாளர்கள் குறைவான அளவில் இருப்பதால் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுவின் மீது உடனடியாக பதில்கள் அனுப்ப வேலை பளுவின் காரணமாக கால தாமதம் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்கள், வெளி அலுவலகத்தில் இருந்து பெறப்படும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில்கள் காலதாமதமின்றி அனுப்ப வேண்டியுள்ளதாலும், அலுவலக பணிகள் எவ்விதத்திலும் பாதிக்காத வண்ணம், ஓய்வு பெற்ற அனுபவமிக்க எழுத்தர் ஒருவரை ஆணை எண்.170, நாள்.18.12.2009ன்படி தற்போது பெற்று வரும் ஓய்வூதியத்தில் நிகர் பாதி தொகையில் (Out Source) முறையில் ( 3 /2025 முதல் 2/2026 வரை) (12 - மாதங்கள்) ஒரு வருட காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.16,850/- வீதம் பணி அமர்த்தி கொள்ளவும், தோராய செலவினம் ரூ.2,02,200/- ஓய்வூதிய பணியாளர் ஒருவரை பணியில் அமர்த்தி கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம்அனுமதி வழங்கலாம்.
2. நிர்வாக நலன் கருதி, அலுவலக பணிகள் பாதிக்காத வண்ணம் ஓய்வுபெற்ற ஒருவரை எழுத்தர் பணியில் மாதம் ரூ.16,850/-வீதம் ஒரு வருட காலத்திற்கு ரூ.2,02,200/- செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.880/2022/சி1) **( தீர்மானம் எண். 190 - அனுமதி வழங்கப்படுகிறது.)**

**191.** வந்தவாசி நகராட்சி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா சைக்கிள் வழங்கும் விழா 01-08-2024 அன்று வந்தவாசி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாண்பு மிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சி தினகரன் நாளிதழில் விளம்பரம் கோரப்பட்டதற்கு விளம்பர கட்டணம் ரூ.26040/- மற்றும் வந்தவாசி அரசு பொதுமருத்துவமனை திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்டம் வழங்க 08-09-2024 அன்று வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு வருகை தரும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் வருகை குறித்து தினத்தந்தி நாளிதழில் 08-09-2024 அன்று விளம்பரம் கோரப்பட்டதற்கு விளம்பர கட்டணம் ரூ.57172/-

1. தினகரன் நாளிதழ் பட்டியல் தொகை ரூ.26,040/-
2. தினத்தந்தி நாளிதழ் பட்டியல் தொகை ரூ.57,172/-

மேற்காணும் விளம்பர நாளிதழ்களுக்கு விளம்பர கட்டணத்தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

Hereafter, Get PRO Letter and Attach for Payment.

1. மன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1851/2024/இ1) **( தீர்மானம் எண். 191 - மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.)**

**192.** வந்தவாசி நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள Kyocera ஜெராக்ஸ் மெஷின் 2022ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டது. சுமார் ஒரு இலட்சத்திற்கு மேல் நகல்கள் எடுக்கப்பட்டதினால் ஜெராக்ஸ் மெஷினில் உள்ள MK KITE DRUM பழுதடைந்துள்ளது. இதனால் ஜெராக்ஸ் மெஷினில் நகல் எடுக்க முடியவில்லை. அலுவலக பணிகள் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே, ஜெராக்ஸ் மெஷினுக்கு புதிய MK KITE DRUM வாங்கிடவும், புதியதாக 4 Tonerகள் வாங்கிடவும் தோராய செலவினம் ரூ.25,000/- ஆகும். பணியின் அவசர அவசியம் கருதி புதியதாக MK KITE DRUM மற்றும் 4 Tonerகள் கொள்முதல் செய்திட 20-03-2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

1. Krish Image Solution — Rs. 24.072/-
2. Computer Technologies Chennai — Rs.26.196/-
3. Goods Enter Prices — Rs.26.432/-

Scanned with OKEN Scanner

Krish Image Solution குறைவாக வழங்கியதால் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி செய்தமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம்அனுமதி வழங்கலாம்.
2. Krish Image Solution அவர்களுக்கு பணி செய்தமைக்கு தொகை ரூ.24,072/- வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.514/2024/இ1) **(தீர்மானம் எண். 192 - அனுமதி வழங்கப்படுகிறது.)**

**193.** பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024 -2025 ம் நிதியாண்டு வார்டு எண்.23, மற்றும் 16 CCTV கேமிரா பொருத்துதல் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 19-03-2025அன்று வரப்பெற்றன.

1. ரேஷ்மிகா கன்ட்ரக்ஷன் -- 3,58 % (மதிப்பீட்டை விட அதிகம்)
2. D.தேவகுமாரி -- 0,48 % (மதிப்பீட்டை விட குறைவு)

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. D.தேவகுமாரி என்பவருக்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.514/2024/இ1) **(தீர்மானம் எண். 193 - அனுமதி வழங்கப்படுகிறது.)**

**194.** வந்தவாசி நகராட்சியின் 2024-2025ம் ஆண்டின் ஆண்டு வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி கணக்குகள் தயாரிக்க வேண்டி உள்ளதால் 2024-2025ம் ஆண்டிற்கான ஆண்டு கணக்கு Trail Balance Sheet, Balance Sheet, Accounts, Bank Reconcilation ஆகியவை கணக்கிட்டு வழங்கிட தோராய செலவினம் ரூ.1.25 (ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம்அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை தனியார் ஆலோசகர் மூலம் மேற்கொள்ளவும், நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.250/2024/பி1) **(தீர்மானம் எண். 194 - அனுமதி வழங்கப்படுகிறது.)**

H. [signature] 24/3-2025

நகரமன்றத்தலைவர்

வந்தவாசி நகராட்சி

Scanned with OKEN Scanner